**பெல்மடுல்ல பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 24 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் பெல்மடுல்ல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பொதுக் களஞ்சிய இருப்பு மற்றும் பொதுக் களஞ்சிய பிரீமிக்ஸ் கணக்குகளில் ரூபா 480,930 ஆன மீதிகளை இனங்கண்டு தீர்காததால் நடைமுறை சொத்துக்கள் அப் பெறுமானத்தால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | சொத்துக்களின் நிலையான தன்மையை உறுதி செய்து கொண்டு உரிய சீராக்கம் செய்யப்பட வேண்டும். | 2020 இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் ரூபா 46,089 இற்கு ஏலத்தில் விற்கப்பட்ட 35 பண்டக உருப்படிகளின் கிரயத்தை சொத்துக் கணக்குகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பராதீனம் செய்யப்பட்ட சொத்துக்களின் கிரயம் கணக்குகளிலிருந்து அகற்றப்பட வேண்டும். | பண்டங்களின் கிரயத்தை அகற்ற நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் வீதவரி மீதிகள் மற்றும் வீதவரி பதிவேடு பிரகார மீதிகளிடையில் ரூபா 1,218,865 வித்தியாசம் காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் உபயோக பதிவேடுகளை இணக்கஞ் செய்ய வேண்டும் | 2020 இறுதி கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | காலாவதியான கூட்டுத் தொகை ரூபா 588,024 ஆன பொது வைப்பு மறறும் கைத்தொழில் வைப்பு தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | எஞ்சியுள்ள வைப்புகள் தற்போது இனங்காணப்படுவதாகவும், அது பற்றி முன் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| | (i) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை 3.1 பந்தி | சபைக்கு சொந்தமான 02 வாகனங்களின் எரி பொருள் பாவனை பரிசீலனை உரிய முறையில் செய்யப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் எரி பொருள் பாவனை பரிசீலனை செய்யப்பட வேண்டும் | இவ் வாகனங்களின் எரி பொருள் பாவனை பரிசீலனையை எதிர்காலத்தில் மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். |
| | (ii) 2018 ஜனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஆளணியினரிற்காக வருடாந்தம் கைச்சாத்திட வேண்டிய செயலாற்றுகை உடன்படிக்கை கைச்சாத்திட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்வரும் ஆண்டு முதல் செயலாற்றுகை உடன்படிக்கை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | 2017 ஜுலை 25 ஆம் திகதிய 02/2017 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை | நிறுவன பொறுப்புக்களின் வெளியீட்டுடன் தொடர்புடைய வெளியீட்டு சுட்டிகள் மற்றும் முக்கிய செயலாற்றுகை சுட்டிகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் உரிய சுட்டிகளை இனங்காண வேண்டும். | எதிர்வரும் ஆண்டினுள் அந் நடவடிக்கைகளை பூரணப்படுத்த நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2018 ஜுலை 19 ஆம் திகதிய 2018/இ-உள்ளூராட்சி 01 இலக்க உள்ளூராட்சி சுற்றறிக்கை | சேவை பெறுனர்கள் இனையத்தினூடாக சேவைகளிற்கு விண்ணப்பிக்கும் போது சந்தர்ப்பம் வழங்குவதற்காக தேவையான வசதிகளை நிலை நிறுத்த சபையிற்கு இயலாதிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட்டு சேவை பெறுனர்களுக்கு தேவையான வசதிகளை வழங்க வேண்டும். | தற்போது பிரதேச சபைக்காக இணையத்தளம் ஒன்றை நிர்மாணிக்க தேவையான முக்கிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 885,672 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 52,068,201 ஆனது.

### 2.2 நிதி கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2003 மற்றும் 2004 ஆண்டுகளுக்குரிய வங்கியில் இடப்படாத பணம், காசோலை மற்றும் அனுப்பப்பட்ட பணத்தின் கூட்டுத் தொகை ரூபா 526,362 தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வங்கியின் இடப்படாத பணம், காசோலை மற்றும் அனுப்பப்பட்ட பணம் தொடர்பாக முறையான பரிசீலனை மேற்கொண்டு தீர்த்துக் கொள்ள வேண்டும். | தற்போது குறித்த பணத்திலிருந்து ஒரு பகுதியை இனங்கண்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் எஞ்சிய பணத்தையும் இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |
| (ஆ) | கடந்த ஆண்டுகளுக்குரிய ரூபா 109,562 ஆன வரவு வைப்பு இனங்காணப்பட்டு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | கடந்த ஆண்டுகளில் இடம்பெற்றிருந்த தவறுகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது குறித்த பணத்திலிருந்து ஒரு பகுதியை இனங்கண்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் எஞ்சிய பணத்தையும் இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |
| (இ) | 1993 ஆண்டு முதல் 2006 ஆண்டு வரையான காலத்தினுள் வங்கியிற்கு செலவு வைக்கப்படடுள்ள கூட்டுத்தொகை ரூபா 149,734 இனை இனங்கண்டு காசேட்டில் குறித்த சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடந்த ஆண்டுகளில் இடம்பெற்றிருந்த தவறுகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது குறித்த பணத்திலிருந்து ஒரு பகுதியை இனங்கண்டுள்ளதாகவும், எதிர்காலத்தில் எஞ்சிய பணத்தையும் இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பில் போடப்பட்ட வருமானம்** | **சேர்க்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம** | **பில் போடப்பட்ட வருமானம** | **சேர்க்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை** |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் வரி | 6,815,863 | 6,738,707 | 7,313,290 | 5,278,669 | 6,830,252 | 2,538,595 | 6,259,218 | 6,301,614 |
| (ii) | வாடகை | 3,588,550 | 3,512,435 | 4,619,846 | 1,382,872 | 2,586,000 | 825,945 | 2,019,230 | 1,922,358 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 632,500 | 660,439 | 660,439 | 295,155 | 565,500 | 2,947,167 | 715,008 | 295,155 |
| (iv) | ஏனைய வருமானம் | 20,003,000 | 25,469,990 | 35,943,302 | 26,544,649 | 14,136,800 | 42,423,381 | 15,450,862 | 22,093,951 |
| | | **31,039,913** | **36,381,571** | **48,536,877** | **33,501,345** | **24,118,552** | **48,735,088** | **24,444,318** | **30,613,078** |

### 2.3.2 வீத வரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீத வரி** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 3,674,335 ஆன நிலுவை வீத வரி மீதியினுள் 05 வருடங்களை விஞ்சி ரூபா 1,561,292 காணப்பட்டது. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருமான நிர்வாகத்தர் பதவி 2019 ஆண்டு வரை வெற்றிடமாக காணப்படுவதாகவும், எதிர்காலத்தில் காணப்படும் நிலுவைகளை முறையாக அறவிட நடவடிக்கை எடுப்பதாகவும் அறிவிக்கிறேன். |
| **(ஆ) ஏக்கர் வரி** | | |
| 2019 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ரூபா 64,015 ஆன நிலுவை ஏக்கர் வரி மீதியினுள் 05 வருடங்களை விஞ்சி பழமையான 57 அலகுகிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 53,774 காணப்பட்டது. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை தாமதமின்றி சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏக்கர் வரி அறவிடப்பட்ட பழைய காணிகள் தற்போது பிரிக்கப்பட்டுள்ளதுடன் நிலுவை ஏக்கர் வரி அறவிடுவதில் பிரச்சினை காணப்படுவதாக அறிவிக்கிறேன். |

### 2.3.3 அனுமதிப்பத்திர கட்டணம்

**சுற்றாடல் அனுமதிப்பத்திரம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை புதுப்பிக்காத 07 கைத்தொழில்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காததன் காரணமாக ரூபா 28,000 ஆன வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள வேண்டிய சகல நிறுவனங்களுக்கும் உரிய ஏற்பாடுகள் பிரகாரம் அனுமதிப்பத்திரம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்குமாறு குறித்த தரப்பினர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் தற்போது கணிப்பீடொன்று மேற்கொள்ளப்படுகின்றதாகவும் அறிவிக்கின்றேன். |

### 2.3.4 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 3,263,042 மற்றும் 2019 முதல் அறையாண்டிற்காக பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 7,670,120 ஆனதுடன் 2019 இறுதி அறை ஆண்டிற்காக பெற வேண்டிய முத்திரைக் கட்டணத்தை 2020 மார்ச் வரையிலும் இனங்கண்டிருக்கவில்லை. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை சேகரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | ஆவணங்கள் கிடைத்த உடன் குறித்த பணத்தை அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (i) 2019 திசெம்பர் வரையிலும் கழிவு கட்டணம் ரூபா 382,380 தொகை அறவிட வேண்டியதாக காணப்பட்டது. மேலும் முறையாக உடன்பட்டிருக்காததால் கழிவு கட்டணம் செலுத்துவதை நீண்டகாலமாக புறக்கணித்திருந்த 02 நிறுவனங்களுக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க முடியாமலிருந்தது. | அறவிட வேண்டிய வருமானத்தை அறவிட தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை பணம் 03 தவனைகளால் அறவிடுவதற்கு மகா சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) 2019 ஆண்டு செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்ட திண்மக் கழிவு முகாமைத்துவ மத்திய நிலையத்தில் கழிவு சுத்திகரிப்பு அலகு மற்றும் உக்காத கழிவுப் பொருட்களை களஞ்சியப்படுத்தும் மத்திய நிலையத்தை நிர்மாணிப்பதற்கு சபையிற்கு இயலாமலிருந்தது. | தேவையான ஒதுக்கீட்டை ஏற்படுத்திக் கொண்டு திட்டங்களை செயற்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். | குறித்த ஒதுக்கீடு கிடைத்ததுடன் அந் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதாக அறிவிக்கிறேன். |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கம் தொடர்பாக 2030 நிகழ்ச்சி நிரல் பற்றி சபை அறிந்திருந்த போதும் அந் நோக்கத்திற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் 2019 திசெம்பர் வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும். | 2020 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

**3.2 மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| **(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை** | | |
| (i) சபையில் செயலாளர் பதவி 2013 ஜுன் மாதம் முதல் வெற்றிடமாக இருந்ததுடன் அதற்காக பதில் கடமை அடிப்படையில் அலுவலர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். அதே போன்று அங்கீகரிக்கப்பட்ட வருமான பரிசோதகர் பதவியொன்று 2017 | முக்கிய பதவிகளின் வெற்றிடங்களை நிரப்ப நடவடிககை எடுக்க வேண்டியமை. | வெற்றிடங்கள் தொடர்பாக உள்ளூராட்ச்சி திணைக்களம் மற்றும் பிரதான செயலாளர் அலுவலகத்தை அறிவூட்டியுள்ளதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | நவம்பர் முதல் வெற்றிடமாக காணப்பட்டது. | | |
| (ii) | அங்கீகரிக்கப்பட்ட ஆளணியினுள் 02 முன் பள்ளி ஆசிரியைகள், வேலை/கள நிர்வாகத்தர் பதவியொன்று மற்றும் மின் தொழிநுட்பவியலாளர் பதவி ஒன்றும் வெற்றிடமாக காணப்பட்டது. | பதவி வெற்றிடங்களை நிரப்ப தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | வெற்றிடங்கள் தொடர்பாக உள்ளூராட்சி திணைக்களம் மற்றும் பிரதான செயலாளர் அலுவலகத்தை அறிவூட்டியுள்ளதாக அறிவிக்கிறேன். |

**(ஆ) ஊழியர் கடன்**

----------------------

| | | |
|---|---|---|
| 10 ஆண்டுகளை விஞ்சிய காலம் முதல் நிலுவையாக உள்ள 23 உத்தியோகத்தர்களுக்குரிய கூட்டுத்தொகை ரூபா 112,651 ஆன நிலுவை கடன் மீதியை அறவிட்டிருக்கவில்லை. | கடன் தொகையை தீர்த்திற்கொள்ள நடவடிகை எடுக்க வேண்டும். | இந்த கடன் தொகை பதிவழிக்கப்பட தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. |

## 3.3 செயற்பாட்டு செயற்றிறனின்மை

--------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் இனங்கண்டிருந்த 05 அனுமதியற்ற நிர்மாணங்களை அகற்றுவதற்கு அல்லது சட்டரீதியாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உப விதிகளின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டும். | சட்டரீதியாக தீர்த்துக்கொள்ள வேண்டிய பிரச்சினைகள் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

-----------------------------------------------

### பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை

--------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான டெக்டர் வண்டியொன்று பழுதுபார்ப்பதற்காக 2018 பெப்ரவரி 05 ஆம் திகதி அபிவிருத்தி ஆக்கம் மற்றும் இயந்திர உபகரண அதிகார சபையிற்கு அனுப்பப்பட்ட போதும், பழுதுபார்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை முறையாக மற்றும் உரிய காலத்தினுள் மேற்கொள்ள வேண்டும். | இது தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் குறித்த நிறுவனத்திற்கு நினைவூட்டல் அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

### 3.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபை சட்டத்தினால் அல்லது ஏனைய எழுத்துமூல சட்டத்தினால் அல்லது சுற்றறிக்கை ஒன்றினால் வழங்கப்பட்டுள்ள அதிகாரம் இன்றி 34 மக்கள் பிரதிநிதிகளிற்கு கூட்டுத்தொகை ரூபா 1,540,000 ஆன கடன் முற்பணம் வழங்ககப்பட்டிருந்தது. | பிரதேச சபை சட்டத்தினால் அல்லது ஏனைய எழுத்துமூல சட்டத்தின் கீழ் இதற்காகன ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மக்கள் பிரதிநிதிகளிற்கு வழங்கப்பட்ட இந்த கடன் தொகை மதிப்பிக்குரிய சபையில் அல்லது விலை மனு குழுவின் அங்கீகாரத்துடன் 04 சதவீத வட்டி அறிவீட்டின் கீழ் 10 தவனைகளில் அறவிடுவதன் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### தீர்க்கப்படாத அவதானிப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1993 ஆண்டில் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த கெப் வண்டியொன்று பழுதுபார்க்க முடியாதளவுக்கு துறுப்பிடித்திருந்த போதும், அதன் உரிமை தொடர்பாக நிலவும் பிரச்சினையை தீர்த்துக் கொண்டு பராதீனம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரிமை தொடர்பாக பிரச்சினை தீர்த்துக்கொண்டு முறையாக பராதீனம் செய்யப்பட வேண்டும். | இது தொடர்பாக ஆலோசனை கோரி உள்ளூராட்ச்சி ஆணையாளரிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் இந்த கெப் வண்டி பயன்படுத்த முடியாத மட்டத்தில் காணப்படுவதால் குருவிட்ட இயந்திர உபகரண நிறுவனத்திற்கு ஒப்படைத்தல் தொடர்பாக அதன் இயந்திர பொறியிளாலரின் ஆலோசனையை கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கிறேன். |